இந்திய உச்ச நீதிமன்றம்

2021-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர்எம்.ஆர். ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர்பி.வி. நாகரத்னா

உரிமையியல் மேல்முறையீடு எண்.7696/ 2021.

மஜ்ஜி சன்னெம்மா என்கிற சன்யாசிராவ் .... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ரெட்டி ஸ்ரீதேவி மற்றும் பலர் ..... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

காலதாமதம்/மன்னிக்கத்தகாத கவனக்கேடு - காலதாமத்தை மன்னித்தல் - எதிர்மனுதாரர்களால் இரண்டாம் மேல்முறையீடு முன்னிடப்பட்டுள்ளதில் ஏற்பட்டுள்ள 1011 நாட்கள் காலதாமதத்தை உயர்நீதிமன்றம் மன்னித்தருளியுள்ளது - சரியான தன்மையுடையதுதானா - காலதாமதத்தை மன்னிக்கும் போது 1011 நாட்கள் அதீத கால தாமதத்தை விளக்க போதுமான காரணம் வெளிக்கொணரப்படவில்லை என்பதை உயர்நீதிமன்றம் உட்கிரகித்திருக்கவில்லை - காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் உள்ள வாதுரைகள், இத்தகைய காலதாமதத்துடன் மேல்முறையீட்டை உயர்நீதிமன்றத்தில் முன்னிட்டுள்ளதில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பெருமளவு கவனக்குறைவுள்ள மற்றும்/ அல்லது தக்க கவனம் தேவைப்படுகின்ற வழக்கு இது என்பதையே காட்டியுள்ளது - இங்கனம்

காலதாமதம் விளக்கப்படாமலேயே இருந்துள்ளது - தன்விருப்புரிமையை உயர்நீதிமன்றம் நடுநிலையான முறையில் செயல்படுத்தியிருக்கவில்லை - உயர்நீதிமன்ற உத்திரவு நசித்திடப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்து கீழ்கண்டவாறு நீதிமன்றம் விளப்பியுள்ளது.

1. மேல்முறையீடு தகுதியின் அடிப்படையில் தீர்மா476னிக்கப்படும். எனவே கால தாமதத்தை மன்னிப்பதால் மேல்முறையீட்டாளருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என உயர்நீதிமன்றம் உற்றுநோக்கியுள்ளது. காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் உள்ள காரணங்கள் இத்தகைய காலதாமதத்துடன் மேல்முறையீட்டை உயர்நீதிமன்றத்தில் முன்னிட்டுள்ளதில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மெத்த அலட்சியம் மற்றும் அல்லது தேவையான விடா முயற்சியின்மை இருந்துள்ளது என்பதைக் காட்டுவதான வழக்காகவே உள்ளது - [பாரா 6.1] [480 - இ - உ]

2. காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் தனக்கு 45 வயது என்றும் தானே வழக்கு நடவடிக்கைகள் அனைத்தையும் கவனித்து வந்ததாகவும் உடல் நல பிரச்சனையால் 01.01.2017 முதல் 15.03.2017 வரை தான் நோயுற்று இருந்ததாகவும் அந்த காலக்கட்டத்தில் படுக்கையில் ஒய்வுற்றிருக்க வேண்டுமென தனக்கு ஆலோசனை கூறப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 15.03.2017ம் தேதிக்கு பிந்தைய காலக்கட்டதிற்கு எந்த விளக்கமும் அதில் கொடுக்கப்படவில்லை.இங்கனம் 15.03.2017 முதல் 2001ம் வருடம் இரண்டாம் மேல்முறையீடு முன்னிடப்பட்டது வரையிலான காலதாமதம் விளக்கப்படாமலேயே

இருந்து வந்துள்ளது.ஆகவே, உயர்நீதிமன்றம் நடுநிலையான முறையில் தன்விருப்புரிமையை செயல்படுத்தியிருக்கவில்லை. [பாரா 6.2] [480 - உ - எ]

ராம்லால், மோதிலால் மற்றும் சோட்ட லால் எதிர் ரேவா கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட்., [1962] 2 எஸ். சி.ஆர்.762 ; பி.கே. ராமச்சந்திரன் எதிர் கேரள மாநிலம் மற்றும் ஒருவர் (1997) 7 எஸ்.சி.சி.556 : [1997] 4 இணைப்பிதழ் எஸ். சி.ஆர்.204 ; பண்ட்லிக் ஜலம் பாட்டீல் எதிர் நிர்வாகப் பொறியாளர் ஜல்கான் மீடியம் திட்டம் (2008) 17 எஸ். சி.சி.448 : [2008] 15 எஸ். சி.ஆர்.135 ; பசவராஜ் மற்றும் ஒருவர் எதிர் சிறப்பு நிலம் கையகப்படுத்தும் அதிகாரி. (2013) 14 எஸ்.சி.சி.81 : [2013] 8 எஸ். சி.ஆர். 227 - பார்வையிடப்பட்டது.

பரிசீலிக்கப்பட்ட தீர் முடிவுகள்

[1962] 2 எஸ்.சி.ஆர். 762 பரிசீலிக்கப்பட்டது பத்தி 3.4

[1997] 4 இணைப்பிதழ் எஸ்.சி.ஆர். 204 பரிசீலிக்கப்பட்டது பத்தி 3.4

[2008]15 எஸ்.சி.ஆர். 135 பரிசீலிக்கப்பட்டது பத்தி 3.4

[2013] 8 எஸ்.சி.ஆர். 227 பரிசீலிக்கப்பட்டது பத்தி 3.4

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : 2021ம் வருடத்திய மேல்முறையீட்டு எண். 7696

ஆந்திரப் பிரதே மாநில அமராவதி உயர் நீதிமன்றம் இரண்டாம் மேல்முறையீட்டு எண்.333/2021ல் முன்னிடப்பட்டுள்ள இ.ம. எண். 1/2021ல் 16.09.2021ம் தேதி பிறப்பித்துள்ள தீர்ப்புரை மற்றும் உத்திரவிலிருந்து

மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்குரைஞர்கள் - ஒய்.ராஜ கோபால ராவ், கே.பிரமோத் குமார், டி. கோபி கிருஷ்ணா

எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்குரைஞர் - சித்தார்த்த ஸ்ரீவஸ்தவா

மாண்புமிகு நீதியரசர் திரு.எம்.ஆர். ஷா அவர்களால் இந்த தீர்ப்பு பகரப்பட்டது

1. இரண்டாவது மேல்முறையீட்டு எண் 331/2021ஐ முன்னிடப்பட்டுள்ளதில் ஏற்பட்ட 1011 நாட்கள் அதீத காலதாமதத்தை மன்னித்து ஆந்திர பிரதேச மாநில அமராவதி உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள எதிர்ப்புக்குள்ளான உத்திரவால் பாதிப்புற்று அதிருப்தியுற்ற, உயர்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரான அசல் வாதியால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மேல்முறையீட்டாளர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த எதிர்மனுதாரர்கள் - அசல் பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமையியல் வழக்கு மு.வ. எண். 40/2013ஐ தாக்கல் செய்த அசல் வாதியாவார்.அதாவது விசாரணை நீதிமன்றம் மேற்படி உரிமையியல் வழக்கை 23.04.2016ம் தேதிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின்படி தள்ளுபடி செய்துள்ளது. அதாவது முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றம் 01.02.2017ம் தேதிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் மூலம் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நசித்து நீக்கறவு செய்து உரிமையியல் வழக்கை அனுமதித்துள்ளது. அதாவது இங்குள்ள எதிர்மனுதாரர்கள் - அசல் பிரதிவாதிகள் 04.02.2017ம் தேதிய தீர்ப்பு மற்றும் உத்திரவிற்கு சான்றிட்ட நகல் கோரி மனு தாக்கல் செய்துள்ளனர்.அதுவும் 10.03.2017ம் தேதி வழங்குவதற்கு

ஆயத்தமாக இருந்துள்ளது.அதாவது அதன்பின் தோரயமாக 1011 நாட்கள் கழித்து இந்த எதிர்மனுதாரர்கள் - அசல் பிரதிவாதிகள் இரண்டாம் மேல்முறையீட்டை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.காலதாமதத்தை மன்னிக்கக் கோரி இ.ம.எண்.1/2021 ஆக விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் மேல்முறையீட்டை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1011 நாட்கள் கால தாமதத்தை மன்னித்து உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள எதிர்ப்புக்குள்ளான உத்திரவே இந்த நீதிமன்றத்தின் முன் உள்ள மேல்முறையீட்டின் கருப்பொருளாகும்.

3. மேல்முறையீட்டு வழக்கை முன்னிடுவதில் ஏற்பட்டுள்ள 1011 நாட்கள் அதீத காலதாமதத்தை உயர்நீதிமன்றம் மன்னித்துள்ளதன் மூலம் இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் மாபெரும் பிழையிழைத்துள்ளது என இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர் - அசல் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் கடுமையாக சமர்ப்பித்துள்ளார்.

3.1 அதைப்போல இரண்டாம் மேல்முறையீட்டை முன்னிடுவதில் செய்ததில் ஏற்பட்ட 1011 நாட்கள் அதீத காலதாமதத்தை விளக்குவதற்கு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்களான இங்குள்ள எதிர்மனுதாரர்கள் தரப்பில் போதுமான காரணம் எதுவும் காட்டப்படவில்லை.

3.2 மேலும் இரண்டாம் முறையீட்டை முன்னிடுவதில் ஏற்பட்ட1011 நாட்கள் அதீத கால தாமதத்தை உயர்நீதிமன்றம் மன்னிக்கும் போது கூட போதுமான காரணம் விளக்கிக்காட்டப்படவில்லை என்பதை உயர்நீதிமன்றம் உட்கிரகிக்கத் தவறியுள்ளது என்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.3 மேலும் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள வாதுரைகளை பரிசீலிக்கையில் 15.03.2017 முதல் 2021ம் ஆண்டு ஜுன் மாதத்தில், இரண்டாம் மேல்முறையீட்டை தாக்கல் செய்தது வரையான காலதாமதத்திற்கு எவ்வித விளக்கமும் காட்டப்படவில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.4 மேலே கண்டவாறு வாதத்தை சமர்ப்பித்து ராம்லால், மோதிலால் மற்றும் சோட்ட லால் -எதிர்- ரேவா கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட்., [1962] 2 எஸ். சி.ஆர்.762 ; பி.கே. ராமச்சந்திரன் -எதிர்- கேரள மாநிலம் மற்றும் ஒருவர் (1997) 7 எஸ்.சி.சி.556 :[1997] 4 இணைப்பிதழ் எஸ். சி.ஆர்.204 ; பண்ட்லிக் ஜலம் பாட்டீல் -எதிர்- நிர்வாகப் பொறியாளர் ஜல்கான் மீடியம் திட்டம் (2008) 17 எஸ். சி.சி.448 :[2008] 15 எஸ். சி.ஆர்.135 ; பசவராஜ் மற்றும் ஒருவர் -எதிர்- சிறப்பு நிலம் கையகப்படுத்தும் அதிகாரி. (2013) 14 எஸ்.சி.சி.81 ஆகிய முன் தீர்ப்புகளைச் சார்ந்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்கவேண்டுமென பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

4 உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்களான 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் ஸ்ரீசித்தார்த்த ஸ்ரீவஸ்தவா மேல்முறையீட்டை முன்னிடுவதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தை அனுமதித்து, மேல்முறையீடு செய்ததில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள எதிர்ப்புக்குள்ளான உத்திரவை ஆதரித்துள்ளார்.

4.1 உயர்நீதிமன்றமானது தன்விருப்புரிமையை பயன்படுத்தி காலதாமதத்தை மன்னித்துள்ள நிலையில் அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 136ன் அதிகாரத்தை

பயன்படுத்தி அந்த உத்திரவில் இந்த நீதிமன்றம் குறுக்கிட இயலாது என சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.2 மேலும், 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான கற்றறிந்த வழக்குரைஞர் காலதாமதம் மன்னிக்கப்படும்போது, அவ்வழக்கில் மேல்முறையீடு பரிசீலிக்கப்பட்டு, நற்கூறுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும், எனவே, மேல்முறையீட்டாளருக்கு எந்த பாதகமும் ஏற்படாது என்ற உயர் நீதிமன்றத்தால் சரியாக கருத்து தெரிவிக்கப்பட்டது என்று பரிந்துரைத்தார். எதிர்மேல்முறையீட்டாளர்கள் மேல்முறையீட்டாளர்களை காலதாமத்தின் அடிப்படையில் வழக்கு தொடுப்பதற்கு பதிலாக, நற்கூறுகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யும்படி இயல்விக்கும் பொருட்டு தற்போதைய மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுரைத்தார்.

5 உபயதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர்களது நீண்ட வாதத்தை நாங்கள் கேட்டுள்ளோம்.

6 உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்களும் அசல் பிரதிவாதிகளுமான இந்த வழக்கின் 1, 2 எதிர்மனுதாரர்கள் இரண்டாம் மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளதில் 1011 நாட்கள் அதீத கால தாமதத்தை மன்னித்து உயர்நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான உத்திரவை பிறப்பித்துள்ளது என்பது முதலில் குறிப்பில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. காலதாமதத்தை மன்னிக்கையில் உயர்நீதிமன்றம் கீழ்கண்டவாறு உட்கிரகித்துள்ளது.

> "இத்தகைய சூழ்நிலையில் இரண்டாம் மேல்முறையீட்டில் சில வினாக்கள் குறித்து விவாதம் தேவைப்படுகின்ற நிலையில் அது குறித்து தகுதியின்

அடிப்படையில் தீர்வைக் கொணராமல் இந்த தருணத்தில் இந்த விடயத்தை நிராகரிக்க தேவையில்லை. காலதாமதம் மித மிஞ்சியதாக இருந்தாலும், அது மன்னிக்கப்பட்டுவிட்டால் என்னவாகிவிடும்.அதிகபட்சம் தரப்பினர்கள் அவரவர் வழக்கை ஆதரிக்க அது ஒரு வாய்ப்பளிக்கும். இந்த வினா நடைமுறை சார்ந்ததாக இருப்பதால் எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பதை விட தகுதியின் அடிப்படையில் ஆரோக்கியமான விவாதத்தை செய்வதை ஊக்குவிக்க நீதிமன்றம் முயற்சிக்க வேண்டும்.

அத்தகைய நோக்கில் பரிசீலிக்கும்போது மனுதாரர் முன்னிட்டுள்ள காரணங்களை ஏற்று இரண்டாம் முறையீட்டை தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை கண்டிப்பாக மன்னித்தே ஆக வேண்டும்.

வெளிப்படையாக, மனுதாரர்கள் தரப்பில் வேண்டுமென்றே எந்தவொரு கவனக்குறைவும் இல்லை.இந்த முயற்சி தக்க கவனம் தேவை என்பதாலும் பாதிக்கப்படவில்லை. குறிப்பாக விசாரணை நீதிமன்றம் அவர்களது வாதத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அது மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மாற்றியமைக்கப்பட்டுள்ள நிலையில் தங்கள் தரப்பு வழக்கை ஆதரிக்க மனுதாரர் தரப்பில் எடுக்கப்பட்ட நல்லெண்ணத்திலான முயற்சியாகவே இது தோன்றுகிறது. இருந்தபோதிலும், இந்த கால தாமதத்திற்கு செலவு தொகையை மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும். இரண்டாம் மேல்முறையீட்டை உரிய காலத்தில் முன்னிட மனுதாரர்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தனக்கு மதிக்கத்தக்க உரிமை சேர்ந்தடைந்துவிட்டதாக எதிர்மனுதாரர்

வாதிட்டுள்ளது இந்த வழக்கில் காணப்பட்ட சூழ்நிலைகளின் பின்புலத்தின்படி முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக இருக்கமுடியாது.

இறுதியில் 05.10.2021ம் தேதிக்குள் கற்றிந்த எதிர்மனுதாரர் வழக்கறிஞரிடம் ரூ. 2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலுத்தவேண்டும் என்பதன் அடிப்படையில் இரண்டாம் மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளதில் ஏற்பட்ட 1011 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இந்த விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது."

இவ்வாறாக மேலே கூறப்பட்டுள்ளதிலிருந்து 1011 நாட்கள் அதீத கால தாமதத்தை விளக்க எந்தவொரு போதுமான காரணமும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதை உயர்நீதிமன்றம் உட்கிரகிக்க தவறியுள்ளது என்பதை காணலாம்.

6.1 காலதாமதம் மன்னிக்கப்படும் பட்சத்தில் தகுதியின் அடிப்படையில்தான் மேல்முறையீடு தீர்மானிக்கப்படும் அதனால் மேல்முறையீட்டாளர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது என உயர்நீதிமன்றம் உட்கிரகித்துள்ளது. மனுதாரர்கள் தரப்பில் வேண்டுமென்றே எந்தவொரு கவனக்குறைவும் இல்லை.இந்த முயற்சி தக்க கவனம் தேவை என்பதாலும் பாதிக்கப்படவில்லை என உயர்நீதிமன்றம்உட்கிரகித்துள்ளது. இருந்தபோதிலும் காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்களிலிருந்து இரண்டாம் மேல்முறையீட்டை காலதாமதமாக முன்னிட்டுள்ளதில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் பெருமளவு கவனக்குறைவுள்ள மற்றும்/ அல்லது தக்க கவனம் தேவைப்படுகின்ற வழக்காக இது உள்ளது என்றே நாங்கள் கருதுகிறோம்.

6.2 காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள வாதுரைகளை நாங்கள் முழுவதுமாக பரிசீலித்தோம்.அதில் 15.03.2017 முதல் 2021ம் ஆண்டு இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது வரையான காலத்திற்கு போதுமான விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை. காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தில் தனக்கு 45 வயது என்றும் தானே வழக்கு நடவடிக்கைகள் அனைத்தையும் கவனித்து வந்ததாகவும் உடல் நல பிரச்சனையால் 01.01.2017 முதல் 15.03.2017 வரை தான் நோயுற்று இருந்ததாகவும் அந்த காலக்கட்டத்தில் படுக்கையில் ஒய்வுற்றிருக்க வேண்டுமென தனக்கு ஆலோசனை கூறப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் 15.03.2017ம் தேதிக்கு பிந்தைய காலக்கட்டதிற்கு எந்த விளக்கமும் அதில் கொடுக்கப்படவில்லை.இங்கனம் 15.03.2017 முதல் 2001ம் வருடம் இரண்டாம் மேல்முறையீடு முன்னிடப்பட்டது வரையிலான காலதாமதம் விளக்கப்படாமலேயே இருந்து வந்துள்ளது.இங்கனம் 15.03.2017 முதல் 2001ம் வருடம் இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது வரையிலான காலதாமதம் விளக்கப்படாமலேயே இருந்து வந்துள்ளது.ஆகவே, உயர்நீதிமன்றம் நடுநிலையான முறையில் தன்விருப்புரிமையை செயல்படுத்தியிருக்கவில்லை.

7 இந்த தருணத்தில் மேல்முறையீட்டை முன்னிடுவதில் உள்ள காலதாமதம் குறித்து இந்த நீதிமன்றம் வழங்கியுள்ள சில தீர்முடிவுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன அவை கீழ்கண்டவாறு பரிசீலிக்கப்படுகின்றது.

7.1 மேற்சொன்ன ராம்லால், மோதிலால் மற்றும் சோட்ட லால் வழக்கில் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது:

“பிரிவு 5ஐ பயன்படுத்தும்போது இரண்டு முக்கிய விஷயங்களை மனதில் கொள்ளவேண்டும். முதலில் கருத்தில்கொள்ள வேண்டியது யாதெனில் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள காலகெடு காலாவதியாகிவிட்டால் அந்த தீர்ப்பு தரப்பினர்களை கட்டுப்படுத்தும் என பாவித்துக்கொள்ளக்கூடிய உரிமையை தீர்ப்பாணை பெற்றவருக்கு காலவரையறை சட்டம் வழங்குகின்றது. இதனை வேறு வார்த்தையில் சொல்வதென்றால் குறித்துரைக்கப்பட்டுள்ள காலகெடு காலாவதியாகிவிட்டால் இந்த தீர்ப்பு சாவாலுக்கு அப்பாற்பட்டது என கருதிடும் பலனை காலவரையறை சட்டத்தின் மூலம் தீர்ப்பாணை பெற்றவர் பெறுகின்றார், காலக்கழிவால் தீர்ப்பாணை பெற்றவருக்கு வந்தடைந்துள்ள இந்த சட்டப்பூர்வமான உரிமைக்கு இளகிய மனம் கொண்டு இடையூறு செய்யக்கூடாது. புறந்தள்ளமுடியாத மற்றொரு பரீசீலிக்கத்தக்க விடயம் யாதெனில் காலதாமதத்தை மன்னிக்க போதுமான காரணம் காண்பிக்கப்பட்டால் தன்விருப்ப உரிமையை பயன்படுத்தி காலதாமதத்தை மன்னித்து மேல்முறையீட்டை விசாரணைக்கு அனுமதிக்க நீதிமன்றத்திற்கு தன்விருப்ப அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கணிசமான நீதியை முன்னெடுப்பு செய்ய நீதித்துறை அதிகாரம் மற்றும் விருப்பஉரிமையை பயன்படுத்த வேண்டுமென்பதற்காகவே இந்த விருப்ப உரிமை வேண்டுமென்றே நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணா -எதிர்- சாத்தப்பன் (1980) ஜே. எல்.ஆர் 12 மெட்ராஸ் 269 என்ற வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் கவனித்துள்ளதுபோல் நீதித்துறை அதிகாரம் மற்றும் விருப்புரிமையானது நன்கு புரிந்துகொள்ளப்பட்ட கொள்கைகளின்

அடிப்படையில் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டுமோ அத்தகைய வழியில் பயன்படுத்தப்படவேண்டும் என்ற அதிகாரவரம்பிற்கு உட்பட்டு தன்விருப்ப அதிகாரத்தை பிரிவு 5ல் நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. கவனக்குறைவாகவோ நேர்மையற்றதன்மை தன்மையுடனோ செயலற்ற தன்மையுடனோ தரப்பினர்கள் காணப்படாதபோது கணிசமான நீதியை முன்னெடுப்பு செய்வதற்கு போதுமான காரணம் என்பது தாராளமயமான கட்டமைப்பை பெறும்."

7.2 மேற்சொன்ன பி.கே. ராமச்சந்திரன் என்ற வழக்கில் 565 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க மறுத்துள்ளபோது காலதாமதத்தை மன்னிக்க கோருவதற்கு நியாயமான திருப்திகரமான அல்லது பொருத்தமான விளக்கம் கூட கொடுக்கப்படாத போது அதனை இலகுவாக மன்னிக்கக்கூடாது என உட்கிரகித்துள்ளது. மேலும் காலவரையறை ஒரு தரப்பினரை கடுமையாகவே கூட பாதிக்கலாம் ஆனாலும் சட்டத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ளபோது அதை முழுமூச்சுடன் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தகைமை நெறியின் அடிப்படையில் காலதாமதத்தை மன்னிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இல்லை என்றும் உட்கிரகித்துள்ளது. மேலும் விருப்புரிமையை பயன்படுத்தி காலதாமதத்தை மன்னிக்கும்போது நீதிமன்றங்கள் நடுநிலையுடன் விருப்புரிமையை பயன்படுத்தவேண்டுமென்றும் உட்கிரகித்துள்ளது.

7.3 மேற்சொன்ன பண்ட்லிக் ஜலம் பாட்டீல் என்ற வழக்கில்கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது:

"காலவரையறை சட்டமானது பொதுக்கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன.காலவரையறை குறித்த சட்டங்கள் சில தருணங்களில்

அமைதிக்கான சட்டம் என்றும் விவரிக்கப்படுகின்றது.வரம்பற்ற மற்றும் காலவரையறை பற்றிய நிரந்தரமான அச்சுறுத்தல்கள் பாதுகாப்பின்மை மற்றும் நிச்சயமற்றதன்மையை உருவாக்குகின்றது.பொது ஒழுங்கிற்கு ஒருவித கால வரம்பு அவசியம், இந்த கொள்கையானது "வழக்குக்கு முடிவு இருக்கவேண்டும் என்பது பொதுநலன் சார்ந்தது" என்ற கோட்பாட்டின் அடிப்படையிலானது.வழக்குகளுக்கு கண்டிப்பாக ஒரு முற்றுப்புள்ளி இருக்கவேண்டியது நாட்டின் நலனுக்கு தேவையானதாகும்.ஆனால் அதே நேரத்தில் காலவரம்பு சட்டங்கள் மோசடி, பொய்சாட்சியத்தை நசுக்கி, கவனத்தை விரைவுபடுத்தி அடக்குமுறையை தவிர்த்து தனிநபர் நீதியை உறுதி செய்வதற்கான வழிமுறையாகும்.பொதுநலன் கருதி சட்டப்படியான தீர்வழிகளுக்கு பரிகாரம் பெற ஆயுட்காலத்தை நிர்ணயிக்க செய்வதே காலக்கெடுவை நிர்ணயிப்பதன் நோக்கமாகும். இவை தரப்பினர்கள் காலம் தாழ்த்தும் நடவடிக்கையில் ஈடுபடாமல் தங்கள் சட்டப்படியான தீர்வழிகளை தகுந்த வகையில் காண வேண்டும் என்ற அர்த்தத்தினாலானது. சாலமண்ட் தனது சட்டவியலில் சட்டங்கள் விழிப்புடன் இருப்பவர்களுக்கு உதவுமே தவிர தூங்குபவர்களுக்கு அல்ல என்று கூறுகின்றார்".

7.4 மேற்சொன்ன பசவராஜ் வழக்கில் காலதாமதத்தை மன்னிக்கையில் தன்விருப்ப உரிமையை ஒவ்வொருவழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ப நடுநிலையான வகையில் செயலுறுத்தவேண்டும் என இந்நீதிமன்றத்தால் உட்கிரகித்து பகரப்பட்டுள்ளது. கவனக்குறைவு, செயலற்றதன்மை மற்றும் நேர்மையற்றதன்மை ஆகியவற்றிற்கு வழக்கின் தரப்பினர் காரணமாக உள்ளபோது "போதுமான காரணம்"

என்ற சொல்லுக்கு தாராளமான கட்டமைப்பை கொடுக்கமுடியாது என இந்நீதிமன்றம் உட்கிரகித்துள்ளது. மேலும் காலவரையறை ஒரு தரப்பினரை கடுமையாகவே கூட பாதிக்கலாம் ஆனாலும் சட்டத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ளபோது, அது முழுமூச்சுடன் செயல்படுத்தப்படவேண்டும் என உட்கிரகித்துள்ளது. மேலும் தரப்பினர் கவனக்குறைவாகவோ நேர்மையற்றதன்மையுடனோ அல்லது செயலற்ற தன்மையுடனோ செயல்பட்டிருந்தால் செலவுதொகை விதித்து காலதாமதத்தை மன்னிக்க அங்கே எந்தவொரு நியாமான காரணமும் இருக்கமுடியாது என உட்கிரகித்துள்ளது. காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் ஒவ்வொரு விண்ணப்பமும் இந்த நீதிமன்றம் வகுத்துரைக்கப்பட்டுள்ள கட்டமைப்பிற்குள் தீர்மானிக்கப்பட வேண்டும் என உட்கிரகித்துள்ளது. போதுமான காரணம் இல்லாதபோது நிபந்தனை விதித்து காலதாமதத்தை நீதிமன்றங்கள் மன்னிக்கத் தொடங்கினால் அது சட்டப்பூர்வ கொள்கையை மீறுவதாகவும் சட்டமன்றத்தை முற்றிலும் புறக்கணிப்பதாகவும் இருக்கும்.

7.5 மேற்சொன்ன பண்ட்லிக் ஜலம் பாட்டீல் என்ற வழக்கில் காலதாமதமான போலியான கோருரிமைகளை தகைமை நெறியின் அடிப்படையில் விசாரிக்கக்கூடாது என இந்நீதிமன்றம் உட்கிரகித்துள்ளது. காலதாமதம் நீதியை பயனற்றத்தாகிவிடும். விழித்திருப்பவர்களுக்கும் மற்றும் "தன் உரிமை மீது தூங்காதவருக்குமே" நீதிமன்றங்கள் உதவிசெய்யும்.

8 மேற்கூறிய தீர்முடிவுகளில் இந்த நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டத்தை காலதாமதத்தை மன்னிக்க கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாதுரைகள் மற்றும் கையிலுள்ள இந்த வழக்கின் சங்கதிகளுடன் பொருத்திப்

பார்க்கும்போது இரண்டாவது மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளதில் ஏற்பட்டுள்ள 1011 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ள 1 மற்றும் 2ம் எதிர்மனுதார்கள் போதுமான அல்லது திருப்திகரமான விளக்கத்தை அல்லது மிககுறைந்தபட்சம் அளவிலான அத்தகையதொரு விளக்கத்தை கூட தெரிவிக்க முனைந்திருக்கவில்லை என்றே நாங்கள் கருதுகின்றோம். உயர்நீதிமன்றம் இத்தகையதொரு அதீத காலதாமதத்தை மன்னிக்க தன்விருப்ப உரிமையை நடுநிலையான முறையில் பயன்படுத்தியிருக்கவில்லை.1011 நாட்கள் அதீத காலதாமதத்தை மன்னிக்கையில் உயர்நீதிமன்றம் கூறியுள்ள காரணங்கள் உண்மையானதாக தோன்றவில்லை. எனவே 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் இரண்டாம் மேல்முறையீட்டை முன்னிலைப்படுத்தியுள்ளதில் ஏற்பட்டுள்ள 1011 நாட்கள் அதீத காலதாமதத்தை மன்னித்துள்ளதில் உயர்நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது. உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளான உத்திரவு சட்டத்தின்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல.

9. மேலேகண்டவாறு பார்வையிட்ட வகையில் மற்றும் மேலே கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக தற்போதைய மேல்முறையீடு அனுமதிக்கப்படுகின்றது. இங்குள்ள 1ம் மற்றும் 2ம் எண் பிரதிவாதிகள் இரண்டாவது மேல்முறையீட்டை முன்னிலைப்படுத்தியுள்ளதில் ஏற்பட்டுள்ள 1011 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து 16.09.2021ம் தேதி உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள எதிர்ப்புக்குள்ளான உத்தரவு இதன் மூலம் ரத்துசெய்யப்படுகின்றது. அதன்விளைவாக 1 மற்றும் 2ம் எண் பிரதிவாதிகள் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீடு இதன்படி நசிக்கப்படுகின்றது மற்றும் ரத்து செய்யப்படுகின்றது.1ம் மற்றும் 2ம் எண்

பிரதிவாதிகள் தாக்கல்செய்த 2021ம் வருடத்திய இரண்டாம் மேல்முறையீட்டு எண் 331 ஆனது காலதாமதத்தின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்படுகின்றது.அதன்படி தற்போதைய மேல்முறையீடு அனுமதிக்கப்படுகின்றது.இருப்பினும் செலவு தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கத்தக்கதல்ல.

மேல் முறையீடு அனுமதிக்கப்படுகின்றது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடையமொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."